# சுந்தரகாண்டம்- இயற்கையாக நடப்பனவற்றை இயற்கையோடு உருவகப்படுத்திய அழகு

4

கே.எஸ். சியாமளா
மதுரை - 625020

**ஆய்வு நோக்கம் :**

கம்பராமாயணம் என்பது நமக்கெல்லாம் மிகவும் தெளிவாக, அழகாக தெரிந்த ஒரு அழகான ராமாயணக் கதை. இந்த கம்பராமாயணக் கதையில் சில பகுதிகள் குழந்தைகளின் பள்ளிப் பருவத்திலேயே அவர்கள் படித்து தெரிந்து கொள்ளும்படி உள்ளன. வால்மிகி எழுதிய ராமாயணத்தில் இருந்து கம்பர் தமிழில் எழுதிய ராமாயணம் தமிழில் இருப்பதால் அனைவரும் படித்து தெரிந்து கொள்ளும் வகையில் மிகவும் எளிதாகவும் புரிந்து கொள்ளும் வகையிலும் உள்ளன. தமிழ் சான்றோர்கள் கம்பராமாயணத்தைப் பற்றி பலர் பலவிதமான கருத்துக்களையும், விளக்கங்களையும் கொடுத்துள்ளனர். கம்பர் ஒவ்வொரு வார்த்தையும் பயன்படுத்திய அழகு விளக்கம் கொடுத்த அழகு மிகவும் பாராட்டுதலுக்குரியது. கம்பராமாயணத்தில் எனக்கு மிகவும் பிடித்த காண்டம் சுந்தரகாண்டம் ஆகும். இந்த சுந்தரகாண்டம் பகுதியில் ஹனுமானின் விடாமுயற்சி, மனப்போராட்டம், வீரம், அன்பு, இரக்கம் என்று அனைத்து வகையான குணங்களையும் பண்புகளையும் அழகான கவிதைநடை சொற்களுடன், நாம் ஹனுமான் செய்யும் செயல்கள் அனைத்தும் நாமும் அதே உணர்ச்சியுடன் உணர்வுபுர்வமாக செய்வது போல் இருக்கும் கம்பராமாயணத்தில் உள்ள ஒவ்வொரு சொற்களும் ரசிக்கும்படியாக உள்ளன. கம்பர் ஹனுமாரை வர்ணித்த காட்சிகள் அவரது உடல்பலத்தை காட்டிய இடங்கள் அனைத்தும் இயற்கையாக இருந்தாலும் அதனை அனைவருக்கும் புரியும் வண்ணம் இயற்கையோடு நாம் உருவகப்படுத்தி அனைத்து படலங்களிலும் கூறியுள்ளார். அவருடைய இந்த உருவகப்படுத்துதல் காரணமாக நாம் அவற்றில் கம்பராமாயணத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழ் இலக்கிய நூல்கள் நிறைய இருந்தாலும் கம்பராமாயணம் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பும் ஒரு நூலாக உள்ளன. இந்த கம்பராமாயணத்தில் என்னுடைய நோக்கம் என்பது தமிழர் எந்தெந்த இடங்களில் இயற்கையாக நடப்பனவற்றை இயற்கையொடு உருவகப்படுத்தி கூறியுள்ளார் என்பதை ஆராய வேண்டும் என்ற விருப்பத்துடன் இந்தக் கட்டுரையை எழுத முற்பட்டேன்.

கம்பர் உருவகப்படுத்திய இடம் மிகவும் எளிமையாக அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் எளிமையான சுலபமான கருத்துக்களோடு ஒப்பீட்டு கம்பர் எடுத்துரைத்த விதம் மிகவும் அழகாகவும் அற்புதமாகவும் இருக்கும். பள்ளிப் பருவத்திலும், மேற்படிப்பு படிக்கும் போதும் கம்பராமாயணத்தில் சில பகுதிகள் படித்திருந்தாலும் தற்போது கம்பராமாயணத்தை படிக்கும் போது மிகவும் ஆவலுடன் அவர் உருவகப்படுத்தி, உவமையாக கூறிய கருத்துக்கள் ஒவ்வொன்றும் மிகவும் தெளிவாக உள்ளது. கம்பராமாயணத்தில் நாம் படிக்கும் போது அந்த உவமை படுத்திய கருத்துக்களுடன் தொடர்பு படுத்தி படிக்கும் போது அவர் கூறிய உண்மைகள், கதைக்கான கருத்துகள், செயல்கள் நமக்கும் மிகவும் பரிட்சயமாக எளிதில் தெரிந்து கொள்ளும் வண்ணம் உள்ளன. கம்பராமாயணத்தில் சுந்தர காண்டம் படலத்தை படித்தால் அதில் கூறிய கருத்துக்களை நாம் ஆய்வு செய்யலாம் என்று தோன்றியது. நாம் இதை, ஆய்வு செய்வதை விட நிறைய செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்ற ஆர்வத்துடனும் என்னுடைய நோக்கமானது கம்பராமாயணத்தில் கம்பர் இயற்கையாக நடப்பனவற்றை எவ்வாறு இயற்கையோடு இணையாக உருவகப்படுத்தி கூறியுள்ளார் என்பதை நாம் தெளிவாக விரிவாக தெரிந்து கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் தான் இந்த ஆய்வு நோக்கமானது உருவானது. இந்த ஆய்வு நோக்கத்தினால் தெரியாத புது விஷயங்கள் பலவற்றை தெரிந்து கொள்ள முடிகிறது என்பதை தெரிவித்து கொள்கிறேன்;.

**ஆய்வுச் சுருக்கம்** :

கம்பராமாயண ஆய்வு என்பது எளிதான ஒன்று அல்ல. கம்பர் இயற்றிய கவிதை நயச் சொற்கள் எதுகை மோனையும் ஆழமான கருத்துக்களுடன் மிகவும் தெளிவாகவும் கம்பராமாயண படைப்பானது அமைந்துள்ளது. கம்பராமாயணத்தில் சுந்தர காண்டம் என்ற ஒரு பகுதியில் ஹனுமான் கடல் தாயும் படலத்தில் ஆரம்பித்தும் சீதையை கண்டு அவரிடம் உரையாடி பிறகு இராவணனை சந்தித்து போராடி பிறகு ராமனைக் காண திரும்பிய வரைக்கும் உள்ள பகுதி சுந்தர காண்டம் ஆகும். சுந்தர காண்டத்தில் உள்ள ஒவ்வொரு சொற்களும் கவிதை நடையுடனும் பொருள் பொழிந்து. உள்ளன. கம்பர் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சிகளைக் கூட அனைவருக்கும் புரியும் எளிதான இயற்கையாக நடக்கும் நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டு நமக்கு கவிதை கம்பராமாயணத்தை கொடுத்திருப்பது மிகவும் அழகு. ஹனுமான் கடல் தாண்ட ஆரம்பிக்கும் இடத்திலிருந்து திரும்பி வரும் வரைக்கும் பல இயற்கை நிகழ்ச்சியுடன் ஒன்று படுத்தி கூறியுள்ளார். சுந்தர காண்டத்தில் மொத்தம் 14 படலங்கள் உள்ளன. அதில் ஒவ்வொரு படலமும் ஒவ்வொரு கதையை விளக்கமாக கூறியுள்ளார். அந்த விளக்கத்தில் பலவிதமான இயற்கை அழகை எடுத்துக் கூறி இயற்கையுடன் ஒப்பிட்டுள்ளார். ஹனுமான் கடல் தாவும் படலத்தில் ஆரம்பித்தும்

இறுதியாக திருவடி தொழும் படலம் வரைக்கும் நிறைய இயற்கை உவமையான உவமைகளை இணைத்துக் கூறியுள்ளார். ஹனுமான் கடல் தாவும் படலத்தில் அவரின் கூடலமைப்பு சிங்கத்தை போலவும், யானையை போலவும் இருந்ததாகக் கூறியுள்ளார். அவர் தாவுவதால் ஏற்பட்ட அதிர்வினால் மலர்கள் உதிர்ந்து மலர்க்குவியலைப் போல் காட்சி அளித்ததாக கூறியுள்ளார். மற்றும் இலங்கை மாநகரின் அழகைக் கண்டு தேவேந்திர பட்டிணமோ என்று வியந்தார். இவ்வாறாகக் கம்பர் ஒவ்வொரு படலத்திலும் பலவிதமான உவமைகளை இணைத்துக் கூறியுள்ளார்.

**திறவுச் சொற்கள் :** கடல் தாவு படலம், ஊர் தேடு படலம், காட்சிப் படலம், சூடாமணிப் படலம், இலங்கை எரியூட்டுப் படலம், சுந்தரகாண்டம், இயற்கை வர்ணனை.

**முன்னுரை :**

கம்பர் எழுதிய கம்பராமாயணக் கதையில் நான் எடுத்த படலம் சுந்தரகாண்டம் படலமாகும். இந்த சுந்தரகாண்ட படலத்தில் கம்பர் இயற்கையாக நடப்பனவற்றை நமக்கு புரியும் வண்ணம் எவ்வாறு எந்தெந்த இடத்தில் எப்படி உருவகப்படுத்தி கூறியுள்ளார் என்பதைக் காணலாம். சுந்தர காண்டத்தில் மொத்தம் 14 படலங்கள் உள்ளன. அவர் ஒவ்வொரு படலத்திலும் பல இயற்கை நிகழ்வுகளுடன் இணைத்து பல நிகழ்ச்சிகளை செயல்களை நமக்கு தெளிவாகக் கூறியுள்ளார். நாம் ஒவ்வொரு படலத்திலும் பலவிதமான உவமைகளை பலவிதமாக்க் காணலாம். அவைகள் மிகவும் அழகாகவும், இலக்கிய நயத்துடன் உள்ளன என்பதை இந்த ஆராய்ச்சியின் மூலம் தெரிந்து கொள்ளலாம். கீழ்கண்ட உபதலைப்புகளில் ஒவ்வொரு படலத்திலும் எவ்வாறு இயற்கையோடு உவமைகளுடன் ஒத்து உவமைபடுத்தி கூறியுள்ளார் என்பதை அறிவோம்.

**கடல் தாவு படலம் :**

இராமணின் ஆணைப்படி, சீதையைத் தேடி இலங்கை செல்ல அனுமன் மகேந்திர மலையில் ஏறி, பேருருவம் கொண்டு ஆர்த்தெழுந்து பாய்கிறான். அனுமன் பாய்ந்த வேகத்தில் அவள் நின்றிருந்த மகேந்திர மலை பாதாளத்தில் ஆழ்ந்தது. கடலைத் தாண்டும் வழியில் இந்துகளின் கட்டளைப்படி மைந்னாக மலை அனுமனுக்கு ஓய்வெடுக்க இடம் கொடுத்து உபசரிக்கிறது. அனுமகன் கடலைத் தாண்டுகையில் வரும் தடைகளான சுரசை (நாக மாதா) மற்றும் அங்காரதாரை (நிழலை ஈர்க்கும் அரக்கி) ஆகியவற்றைத் தன் புத்திசாலித்தனத்தாலும் வலிமையாலும் வெல்கிறான். பல தடைகளைத் தாண்டி அனுமன் இறுதியில் இலங்கையை வந்தடைகிறான்..

இந்த கடல் தாவும் படலத்தில் ஹனுமானின் தோற்றமானது சிங்கம் போலவும் கர்ஜிக்கும் யானையை போல் இருந்தாகக் கூறியுள்ளார்.

"இடுக்கு உறுபொருள்கள் என் ஆம்! எண் திசை
நடுக்கு உற விசும்பில் செல்லும் நாயகன் தூதன் நாகம்
ஒடுக்குறு காலை வன் காற்று அடியொடும் ஒடித்த அந்நாள்
முடுக்குறக் கடலில் செல்லும் முத்திலைக் கிளயும் ஒத்தான்"
கொட்புறு புரவித் தெய்வக் கூர் நுதிக் குலிசத்தாங்கும்
மண்ணவர் இறைஞ்ச செல்லும் மாருதி மறம் உள் ஷர
அண்ணல் வான் அரக்கன் தன்னை
அருக்குவென் இன்னம் என்னா
கண்ணுதல் ஒழியச் செல்லும் கைலை அம் கியும் ஒத்தான்

-மேற்கூறிய பாடலில் ஹனுமான் தோள் வலிமையானது கைலாயங்கிரி மலையை ஒத்துள்ளதாக உவமைப்படுத்தி கூறியுள்ளார்.

**ஊர் தேடு படலம் :**

கம்பராமாயணத்தின் சுந்தர காண்டத்தில் இடம் பெற்றுள்ள ஊர் தேடு படலம் அனுமன் கடலைத் தாண்டி இலங்கை மாநகருக்குள் நுழைந்து சீதையைத் தேடும் முன் நகரின் வளத்தையும், அரக்கர்களின் இயல்பையையும் இராவணனின் வலிமையையும் உற்று நோக்கி அதிசயிக்கும் காட்சியை விவரிக்கிறது. இதில் காணப்படும் உவமைகளைக் காணலாம்.

"பொன் கொண்டு இழைந்த . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . விட்டு மதி முட்டுவன மாடம்"
"பஞ்சி ஊட்டிய பாட்டு . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . உவமைய ஆக்குற அமைவ"
"மணிகள் எத்தனை பெரியவும் . . . . . . . . .
. . . . . . . . . அழகு இழைத்த அத்தொழில்கள்"

-இந்த செய்யுளில் பொன்னும் மணியும் பதித்த மாடங்கள் வானம் அஞ்சும் படி அவை ஓங்கியிருந்தன. ஆகாய கங்கை நீர் போன்ற மகளிர் சொல் செந்நிறக் சுந"தலுடன் அரக்கியர் கற்பக மலரில் மணம் கிளியுடன் குழல், யாழ், வீணை போல்பேசினர்.

**காட்சிப் படலம் :**

கம்பராமாயணம் சுந்தர காண்டத்தில் உள்ள காட்சிப்படலம் அனுமான் இலங்கையின் அசோகவனத்தில் சிறைபட்டிருக்கும் சீதாதேவியைக் கண்ட காட்சியையும், அவள் துயரத்தையும், அவள் மனநிலையில் ஏற்படும் மாற்றங்களையும் மிக அழகாக விவரிக்கும் பகுதியாகும். இராமனைப் பற்றி நினைவுகளாலும், ராவணின் மிரட்டல்களாலும் வருந்தும் சிதையை அனுமன் கண்டு அவளுக்கு நம்பிக்கை அளிக்கும் முன் அவளது நிலையைக் கண்டு நெகிழ்வதைப் படலம் காட்டுகிறது.

“துயில் என கண்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . வெம்புலி குழாத்து அகப்பட்டது அன்னாள்”

சீதா தேவி. . . . . . . . புலிக் கூட்டத்திற்குள் அகப்பட்ட மான் போல நிலம் துடித்தன . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . நெடுவானம் கலந்து இடித்தன வெடித்தன புசண
மங்கலகலசங்கள்

ஹனுமான் சோலையின் உள்ளே பிரகாசிக்கும் போது அங்கங்கள் துடிப்பது போல் நிலம் அனைத்தும் இடி மின்னல் இல்லாமல் துடித்ததாகக் கூறியுள்ளார்.

**உருக்காட்டு படலம்** :

கம்பராமாயணம் சுந்தர காண்டத்தில் உருக்காட்டுப் படலத்தில் சீதையை அசோகவனத்தில் கண்டு அனுமன் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் பாடல் சீதை மயிலைப் போன்று சிவந்த வாய் கொண்டவள் என்றும், இராமனின் தூதனாக அனுமன் தன்னை வணங்கி அறிமுகப்படுத்தியதையும் கூறுகிறது இந்த அரிய காட்சியை விவரிக்கும் செய்யுள், சீதையின் தூய்மையையும் அனுமனின் பக்தியையும் சுட்டிக்காட்டுகிறது.

“வஞ்சனை மானின் பின் . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . உயஞ்சனென் இருந்தாலும் உலகம் கொள்ளுமோ”

சீதா தேவி . வஞ்சனை மானின் பின் என் மன்னனைப் போக்கிறேன் தம்பியையும் வைது அனுப்பினேன் நஞ்சு போன்றவன் இல்லத்தில் இருக்கிறேன் என்றாள்

**சூடாமணிப் படலம் :**

சுந்தரகாண்டம் என்பது அனுமனின் வீரத்தையும், ஆற்றலையும், அறிவையும் போற்றும் காண்டமாகும். சூளாமணி என்பது சிதையின் தலையில் இருக்கும் மிகச்சிறந்த

பிரகாசமான விலைமதிப்பற்ற ஆபரணம். அசோகவனத்தில் சிதையை சந்திக்கும் அனுமன் இராமனின் அடையாள மோதிரத்தை அவளிடம் கொடுக்கிறான். அந்த மோதிரத்தைப் பார்த்து மகிழும் சிதை, இராமனுக்குத் தன் இருப்பை உறுதி செய்வதற்காகத் தன்னுடைய சூளாமணியை அனுமனிடம் அடையாளமாக தருகிறாள்

“சிதை அனுமனிடம் இராமன் வந்து போகிட்டு இந்த

இலங்கையானது அரக்கர்களின் எலும்புக் குவியல்களால்

பெரும் மலை போல் காணப்பட வேண்டும்” என்கிறார்.

**பொழில் இறுத்த படலம் :**

பிராட்டியின் சூடாமணியுடன் விடை பெற்றுக் கொண்ட அனுமன் மேற்கொண்டு செய்த செயல்களைக் கூறுவது இந்தப்பகுதி.

“நெறிக்கொடு வடக்கு உறும் . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . ஓர்செயற்கு உரிய காரியம் மதித்தான்

வண்டுக் கூட்டத்தினை மலர்கள் நிறைந்த சோலை” என்று கம்பர் வருணிக்கிறார்.

”ஈனம் உறுபற்றலசர . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . எப்பரிசின் நான் அடியன் ஆவேன்!

-இந்த செய்யுளில் கடலுக்கும், மீனுக்கும் உவமையாகக் கூறியுள்ளார்.

கிங்கரர், சம்புமாலி, பஞ்ச சேனாபதிகள், அக்ககுமாரன் வதைப் படலம்

கம்பராமாயணத்தின் சுந்தர காண்டம் அனுமன் இலங்கையில் சிதையைத் தேடி அரக்கர்களை அழித்து, இலங்கையை எரித்து மீளும் வீர சாகசங்களைக் கூறுகிறது. இதில் கிங்கரர், சம்புமாலி, பஞ்ச சேனாபதிகள், அக்ககுமாரன் போன்றவர்களை அனுமன் அழித்த வதைப்படலங்கள்.

உரும் ஒத்த முழக்கின் செங்கண் . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

சொரி முத்த மலை சூடும் துகிர்கொடி தடந்தேர் – சுற்ற

போருக்கு செல்லும் யானைகள் இடி போன்ற பிளிறலையும், சிவந்த கண்களையும் வெண்மையான தந்தங்களையும் முகபடாம் அணிந்த நெற்றியையும் உடைய மலை போலத் தோன்றுகின்றதாகக் கூறுகிறார்.

“ஆணைமேல் முரசு அறைந்தனர் . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மீன்வான் இடு வில் எனப் படைக்கலம் மிடைந்த

-பெரிய அரக்கர் படைகள் நுரையை உடைய கடலைப் போல எல்லாப்பக்கங்களிலும் பரவலாயிற்று விடாது பெருமழை பொழிகின்ற மேகம் போல போர் முரசங்கள் ஒலித்தன.

“காதமும் கழுகும், கபயும் . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . தோகையர் மனமும், தொக்க தும்பியும் தொடர்ந்து புற்ற “அக்கக் குமாரன் பின் சென்ற அரக்கிகள் பாசின் இனிமை வாய்ந்த சொற்களையும், சிவந்த வாயையும், வேலாயுதம் போன்ற கண்களையும் பகுத்த மூங்கில்கள் போன்ற தோள்களை உடைய மயில் போன்ற சாயலை உடைய அரக்கி மார்களது மணமும் தொகுதியான வண்டுக் கூட்டங்களும் அவர்களைத் தொடர்ந்து சுற்றி சென்றதாகக் கூறுகிறார்.

**பாசப்படலம் :**

இந்திரஜித் அனுமனை பாசத்தால் கட்டிய செய்தியை கூறுவது இந்தப் படலம் பாசம் என்பது பெரும் பாம்பு வடிவம் கொண்டு அனுமனைக் கட்டுகின்ற பிரமாத்திரத்தைக் குறிக்கும்

“அரம் சுடர் வேல் தனது அனுசன் இந்த சொல் . . . . . . . . .

. . . . . . . . . . . பரஞ்சுடர் ஒருவனைப் பொருவும் பான்மையான்

இதில் பல உவமைகள் உள்ளன. 1 ஒளி வீசப்பெற்ற வேலாயுதத்தை உடைய தனது தம்பி 2. நெருப்பு சுடர் போல் பெருமுச்சு விடுதல் 3. மேரு மலையை வளைத்த ஜோதி வடிவான சிவபெருமான் போன்ற உவமைகளைக் கூறியுள்ளார்.

“ஆயமாத் தானைதான் வந்து . . . . . . . . . . .

. . . . . . . . . . . வாயில் அருவி சோர் வயிரக் கண்ணான்”

-இதில் அருவி போல் நீர் ஒடுகுகின்ற பகைமை கொண்ட கண்களை உடைய இந்திரசித்து விரைவிலே தேரில் ஏறி வந்து இராவணன வசித்திருந்த யாணர் வாயில் பொருந்திய அரண்மனையில் புகுந்தான்.

**இலங்கை எரியூட்டுப் படலம்** :

ஹனுமான் இலங்கை நகரை கொளுத்தியதை கூறும் படலம் இந்தப்படலம் இலங்காபுரியை அக்கினி தேவனுக்கு இரையாகக் கொடுத்தாகக் கூறுகிறார் மற்றும் அரக்கிகள் அல்லல் படும் துன்பத்தையும் இந்தப்படலத்தில் விவரிக்கிறார்.

“வாசல் இட்ட எரி மணி மாளிகை . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . புசலிட்ட இரியல் புரம் எலாம்"
மாளிகை முழுவதும் எரிந்ததினால் மக்கள் அரக்கியர் அனைவரும் இங்கும் அங்குமாக ஓடுவது ஊசலாடுவது போல ஓடுகின்றனர் என்று கூறுகிறார் கம்பர்.

ஆயுத அங்கு ஓர்குறள் உரு ஆப் அடித் . . . . . .
மேல் எழுந்த கரும்புகை உலகம் அளிக்க எழுந்து பரந்தது உலகம் அளக்க

எழுந்த திரிவிக்கிரமான திருமாலைப் போல ஆயிற்று என்க நிறத்தாலும், மேல் எழுதலாலும் வெம்புகை திருமாலை ஒத்திருந்தது என்ற கூறுகிறார் கம்பர்.

**பிணி விட்டு படலம் :**

பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட சிறிது பொழுது தாழ்ந்து அக்கட்டினின்று தன்னை விடுவித்துக் கொண்டதை இப்படலம் காட்டுகிறது.

"முயலு அலைத்து எடு முது மரத்தின் மொய்ப்பு தோள் . . . . .

. . . . . . வயது அலைத்து இயைவின் மயங்கினார் பலர்

-ஹனுமனின் தோலானது எறும்பினங்களால் சூழப்பெற்று வளர்ந்த ஒரு பழைய மரத்தை போல அனுமனது வலிய தோல்களை உவமையாகக் கூறுகிறார்.

அரம்பையர் விஞ்சை நாட்டு . . . அகை வல்லியர் . . . . . .

. . . . . . . . . . பறம்பு அது கம்பையர் தலை மயங்கினர்

தேவமனரில் வித்யாதர நாட்டுக் கூந்தலை உடைய கொடி போன்ற பெண்கள், யாழ் நரம்பின் இசையை விட இனிய சொற்களை உடைய நாகலோகத்துக் கன்னியர் கரும்பு போன்ற சுவையை நல்கும் சித்த கணப் பெண்கள். யட்சகுலமகளிர் அவைத்த இரைச்சலுடையவர்களாய் எல்லா இடங்களிலும் வந்து கூடினார்கள்.

**திருவடி தொழுத படலம் :**

இறுதிப் பகுதியாக வருவது திருவடி தொழுத படலம் சீதையைத் தேடி இலங்கைக்கு சென்ற அனுமன் அவளைக் கண்டு ஆறுதல் கூறி அசோகவனத்தை அழித்து அரக்கர்களை வென்று, இலங்கையையும் எரித்து விட்டு திரும்பி வந்து இராமனை அடைந்த அனுமான் அவனது மலரடிகளில் வணங்கி, தான் கொண்டு வந்த சூளாமணி (சிதையின் அணிகலன்) மற்றும் அவளது செய்திகளை முழுமையாக கூறுகிறான்.

மைந்நாகம் என்ன நின்று குன்றையும் . . . . . . . . . .

. . . . . . கொயன் நாகம் நறுன் தேன் சிந்தும் குன்றிடைக்
குதியும் கொண்டான்.

-சமைந்நாகம் என்கின்ற மகேந்திர மலையின் குதித்தான் அங்கு அனுமன் வரவினை படையினர் எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். தாய் வர கண்ட பறவை போல மகிழ்ந்தனர். அழுதும், தொழுதும், தழுவியும் வரவேற்றனர். உன் வெற்றியை உன் முகமே காட்டுகிறது என்றனர்.

**முடிவுரை :**

கம்பராமாயணத்தின் ஐந்தாவது காண்டமான சுந்தரகாண்டம் அனுமனின் வீரத்தையும், விவேகத்தையும், பக்தியையும் போற்றும் தலைசிறந்த பகுதியாகும். ராமாயணத்தின் மற்ற காண்டங்கள் இடங்களின் பெயரால் அமைந்திருக்க இக்காண்டம் மட்டும் சுந்தரம் (நன்மை/அழகு) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. நம்பிக்கையின் தொடக்கமாக சீதையைத் தேடிய அலைச்சலுக்கு முடிவு கட்டி அவளிருக்கும் இடத்தை உறுதி செய்த காண்டம் இது. அனுமனின் ஒப்பற்ற திறமையையும், ராமபிரான் மீது அவன் கொண்ட எல்லையற்ற பக்தியையும் உலகிற்கு வெளிப்படுத்தியது. எண்ணியதை முடிக்கும் ஆற்றல் என்பதை உணர்த்தி வெற்றிக்கான அடித்தளம் இலங்கையிலேயே இடப்பட்டதை இக்காண்டத்தின் முடிவு உணர்த்துகிறது. சுந்தரகாண்டம் முழுவதையும் படிப்பதும் கேட்பதும் பக்தர்களின் கவலைகளைத் தீர்த்து நன்மைகளைத் தரும் என்பது ஆன்மீக நம்பிக்கையாகும்.

கம்பர் ராமாயணம் முழுவதும் நமக்கு புரியும் வகையில் நிறைய இடங்களில் பல வகையான உவமைகளை உபயோகித்துள்ளார். ராமாயணத்தில் இயற்கையாக நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் இயற்கையையே ஒப்பிட்டு அழகான் விளக்கத்தையும் கொடுத்துள்ளார். அதனால் கம்பர் உவமையாக எடுத்து நமக்கு அளித்த பகுதிகளை நான் ஆய்வு மேற்கொண்டு எழுதியுள்ளேன்.

**மேற்கோள்கள் :**

கம்பர் ராமாயணம் காவியத்தை எழுதிய ஒவ்வொரு படலத்திலும் கற்பனைக் கலந்த கவிநயத்துடன் இயற்கையை ஒன்றி ஒவ்வொரு செயலிலும். தோற்றத்திலும், ஹனுமனை வர்ணிக்கும் போதும், இலங்கை மாநகரை வர்ணிக்கும் போதும், அரக்கிகள் தோற்றத்தை வெளிப்படுத்துவதிலும் பலவகையான உவமைகளை பயன்படுத்தி அனைவரும் படித்து ரசிக்கும் வண்ணம் கவிநயத்துடன் அழகாக கம்பராமாயணத்தை இயற்றியுள்ளார். இதில் சில மேற்கோள்களை எடுத்துக் காட்டியுள்ளேன்.

1. “இடுக்கு உறு பொருள்கள் என் ஆம்? எண் திசை சுமந்தயானை

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முடுக்குற கடலில் செல்லும் முத்தலைக் கிரியும் ஒத்தான்"

-கடல்தாவு படலம்

2. "பொன் கொண்டு இழைத்த . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . விட்டு மதி முட்டுவன மாடம்"

3. "மணிகள் எத்தனை பெரியவும் . . . . . . . . . . . . . .

. . . . . . .. . . அழகு இழைத்த அத்தொழில்கள்"

-ஊர் தேடு படலம்.

4. துயில் என கண்கள் . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . வெம்புலி குழாத்து அகப்பட்டது அன்னாள்"

-காட்சிப் படலம்

5. "வஞ்சனை மானின் fpன் . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . உயஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ"

-உருக்காட்டு படலம்

மேற்கூறிய மேற்கோள்கள் அல்லாமல் கம்பர் நிறைய இடங்களில் ஒவ்வொரு படலத்திலும் இடத்திற்கு தகுந்தாற் போல் பலவிதமான உவமை உவமேயங்களை உபயோகித்துள்ளார். கம்பராமாயணத்தை படிப்பவர்க்கு மிகவும் பிடிக்கும் வண்ணம் மிகவும் எளிதாக அழகான கவிநயத்துடன் கம்பர் ராமாயணத்தை இயற்றியுள்ளார்.

**துணையில் பட்டியல்:**

1. கம்பராமாயணம் -சுந்தரகாண்டம் - கம்பர் முதல் பதிப்பு – 2023 வெளியீடு – புஸ்டகா புஸ்டகா டிஜிட்டல் மீடியா, II7-002 மேன்ட்ரி ரெசிடென்ஸி பண்ணேக்காட்டா மெயின் ரோடு பெங்களுர் – 560076, கர்நாடகா - இந்தியா

2. கம்பராமாயணம் – மூலமும் உரையும், 05 சுந்தர காண்டம் ஏற்றுதல் - கோவிலூர் நூலகம்

3.கம்பராமாயணம் - ஆசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன்